திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற அடிப்படைத் தகுதிகள் என்ன ? 1993–94ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தின்கீழ் எவ்வளவு பேர்கள் பயனடைந்துள்ளனர் ? 1994–95ஆம் ஆண்டில் எவ்வளவு பேர்கள் பயனடைய இருக்கிறார்கள் ? இதற்கான வருமான வரம்பை உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 6,500 ரூபாய் என்று இருந்த வரம்பை இன்றைக்கு 12,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். இதற்குமேல் அதை உயர்த்துவதற்கான பரிசீலனை அரசிடத்தில் இல்லை. அதைப்போல் 1000 ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்த விதவை திருமண உதவித் திட்டத்தில், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர் ஆயிரம் ரூபாய் என்பதை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். 1993–94-ல் 863 பேர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. 17.26 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1994–95–ல் 1050 பேர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று அதற்கு 21 இலட்சம் ரூபாயை சமூக நலத் துறை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

93—

வன வளத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள்.

11024—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீஃப் கன்சர்வேட்டராக சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., எனும் அதிகாரி வன வளத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி அரசுக்கு ஏதேனும் திட்டம் சமர்ப்பித்தாரா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

1994 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திரு. ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ். 1979-80ஆம் ஆண்டில் வனத் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தபொழுது தயாரிக்கப்பட்ட திட்டங்கள் யாவும் செயல்படுத்தப்பட்டுவிட்டன. அவர் தயாரித்து அளித்த நிறைவேற்றப்படாத திட்டங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. அவர் பதவி முடிந்து 12 ஆண்டுகள் தற்போது கடந்துவிட்டது. இன்றைக்கு எந்தத் திட்டங்களும் செயல்படுத்தாமல் இல்லை.

(ஆ) அவர் தயாரித்து செயல்படுத்தப்படாத திட்டங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைகளிலே விலை உயர்ந்த மரங்கள் இருக்கின்ற காரணத்தால், அவை பட்டுப் போகிறபோது, அவற்றை மலையிலேயே ஏலம் விடுகிறார்கள். அந்த மரங்களை எடுத்துச் செல்லும்போது, பக்கத்திலே இருக்கும் மரங்களையும் வெட்டி எடுத்துக் கொண்டு செல்லுகிறார்கள். அதைத் தடுக்க, வனத்துறை ரேஞ்சர்கள், பாரஸ்ட் ஆபீசர்கள் மூலமாக அந்த மரங்களைக் கொண்டு வந்து, அரசு மூலமாக ஏலம் விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை மூலமாக ஏலம் விடுவதற்கு நிறைய டிப்போக்கள் இருக்கின்றன. அங்கே வைத்துத்தான் ஏலம் விடுகிறார்கள். மழையாலோ அல்லது மற்றபடி அழிந்துபோன மரங்களை ஆங்காங்கே சில இடங்களில் டெம்ப்ரரி டிப்போக்கள் மாதிரி அமைத்து, அங்கே ஏலம் விடுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், வனப் பகுதி என்பது நீண்ட பரப்புள்ளது. 50 மைல்கள், 60 மைல்கள் மரங்களை எடுத்துச் செல்ல வேண்டுமானால் அதற்கு டிரான்ஸ்போர்டேஷன் செலவு அதிகமாகிறது. அதற்கு நிதிப் பற்றாக்குறை அல்லது நிதி ஒதுக்கீடு இல்லாத பட்சத்தில் பொது மக்களுக்குத் தெரிய ஏலம் விடப்படுகிறது. அதுமட்டுமல்ல, ஏலம் எடுத்தவர்கள் ஏலம் விடப்பட்ட மரங்களைத் தான் எடுத்துச் செல்ல முடியுமே தவிர மற்ற மரங்களை எடுத்துச் செல்வதற்கு சட்டத்தில் இடமே இல்லை. அதை இந்த அரசு அனுமதிக்கவும் இல்லை. இதில் கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 நவம்பர் 10

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே திருமலைக்கேணி என்ற முருகனுடைய ல்தலம் இருக்கிறது. அதை சுற்றுலா ஸ்தலமாக ஆக்க வேண்டுமென்று மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் சொல்லி 10,12 வருடங்கள் ஆகின்றன. அங்கே மான்கள் சரணாலயம், மயில்கள் சரணாலயம் அமைக்க வனத் துறையிலே போதுமான இடங்கள் இருக்கிற காரணத்தால் அதை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுகூட புதிய சரணாலயங்கள் 8 அமைக்கப்பட்டன. விடுதலை பெற்ற பிறகு சென்ற ஆண்டுவரை தமிழகத்தில் 14 சரணாலயங்கள் தான் இருந்தன. சென்ற ஆண்டு 8 சரணாலயங்கள் அமைக்கப்பட்டன. இந்த ஆண்டு எந்தெந்தப் பகுதிகளில் சரணாலயங்கள் அமைக்க வேண்டுமென்பது பற்றி அரசு ஆய்ந்து வருகிறது. எந்தெந்தப் பகுதிகளில் சரணாலயங்கள் அமைக்க வேண்டுமென்பது பற்றி முடிவு எடுக்கிறபோது அந்தப் பகுதியின் பொருளாதாரப் பிரச்சினை போன்றவை பரிசீலிக்கப்படும். மேலும் ஒரு பகுதியில் சரணாலயம் அமைக்கப்படுவதன் மூலமாக, அங்கே இருக்கக்கூடிய மக்கள் சில கடுமையான சட்ட திட்டங்களை அனுசரிக்க வேண்டிய சூழ்நிலை வரும். எனவே இதற்கு உகந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து, இந்த ஆண்டும் அரசு அறிவிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பசுபதி, ஐ.ஏ.எஸ். அளித்த திட்டம் பற்றிய மூலக் கேள்வியைக் கொடுத்துவிட்டு, அது பற்றி எந்தத் துணைக் கேள்வியும் கேட்கவில்லை.

வினா எண் 94, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

94—

விராலிமலையில் மயில்கள் சரணாலயம் அமைத்தல்

***25347—திரு. சி. குழந்தைவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—